# தவக்காலப் பிரச்சாரம் 2024

## “ஒளியாய் இருங்கள், பிறருக்கும் ஒளியைக் கொண்டுவாருங்கள்”

கோலாலம்பூர் மாமறை மாவட்ட மறைக்கல்வி நிலையத்தால் தயாரிக்கப்பட்டது

### தவக்காலம் என்றால் என்ன என்பதைப் பற்றி நினைவுகூருவோம்.

1. ”தவக்காலம்” என்றால் என்ன பொருள்?
   தவக்காலம் ஈஸ்டர்பெருவிழாவுக்கு முன் உள்ள ஆன்மீகத்தயாரிப்பின் காலத்தைக் குறிக்கிறது.
2. தவக்காலம் (Lent) இந்த வார்த்தை எங்கிருந்து வந்தது?
   லெங்க்டன் என்னும் இந்த வார்த்தை ஆங்கிலத்திலிருந்து வந்தது. இதனுடைய பொருள், வசந்தகாலம். வசந்த காலம் புதிய வளர்ச்சி, வாழ்வு, எதிர்நோக்கு மற்றும் மாற்றத்தைக் கொண்டுவரும் காலம்.
3. தவக்காலம் ஏன் மிகவும் முக்கியம் வாய்ந்தது?
   தவக்காலம் மனம்திரும்புதலின் காலம். மனம் திரும்புவதென்றால் நாம் கடவுளுக்கு எதிராக பாவம் செய்துவிட்டோம் என்பதை உணர்ந்து அவரிடம் மன்னிப்பு கூறி அவரோடு நாம் மீண்டும் உறவைப் புதுப்பித்துக்கொள்வதாகும். தவக்காலம் ஈஸ்டர் பெருவிழாவை பொருள் நிறைந்த விதத்தில் கொண்டாட நம்மை தயாரிக்கும் காலமாகும்.
4. தவக்காலத்தின் மூன்று முக்கிய நடைமுறைகள் யாவை?
   இறைவேண்டல், உண்ணாநோன்பு மற்றும் தர்ம்ம்

- இறைவேண்டல்: கடவுளோடு உரையாடவும் அவருக்குச் செவிகொடுக்கவும் உதவிசெய்கிறது. இதனால் நாம் என்ன செய்யவேண்டுமென்று கடவுள் விரும்புகிறாரோ அதை நம்மால் அறிந்துகொள்ள முடியும்
- உண்ணாநோன்பு: இயேசுவின் பாடுகளிலும் உலகில் உள்ள மக்களின் துன்பங்களிலும் நாமும் பங்கெடுக்க உதவிசெய்கிறது
- தர்மகாரியங்கள்: கடவுளின் ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நந்றி செலுத்தவும், அவர் தந்த ஆசீரை தேவையில் இருப்போருடன் பகிர்ந்துகொள்ளவும் தர்மகாரியங்கள் உதவுகிறது

நற்செய்தி வாசிப்பு மற்றும் சிந்தனை: மத்தேயு 5:14-16

- “நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்” என்று இயேசு கூறுவதன் பொருள் என்ன?
- இந்த தவக்காலத்தில் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு அல்லது உங்கள் நண்பர்களுக்கு ஒளியாக இருந்து, அவர்களுக்கும் ஒளிகாட்டக்கூடிய இரண்டு வழிகளைக் குறிப்பிடவும்.

நற்செய்தியின் அடிப்படையில் தனியாக, பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் உதவியுடன் செய்யக்கூடிய மூன்று செயல் நடவடிக்கைகள் கீழே உள்ளன.

செயல்நடவடிக்கை எண்:1

# Plugged In and Turned On




"You are the light of the world." Matthew 5:14 (NIV)

Based on Matthew 5:14-16 (NIV)

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | V | F | O | K | U | L | Y | B | D | S | M | M | O | I |
| M | J | M | B | Y | D | T | G | Y | Q | E | S | X | Z | A |
| M | Z | V | M | L | I | E | O | S | L | R | E | L | Z | R |
| L | P | A | R | C | S | N | O | L | H | L | P | D | I | O |
| I | Z | V | K | I | C | Y | D | F | W | I | H | B | S | I |
| G | L | D | A | A | V | S | F | L | Y | P | N | B | R | F |
| H | B | R | D | K | N | A | W | O | R | L | D | E | Z | B |
| T | P | I | O | O | H | I | D | D | E | N | E | R | H | L |
| B | C | V | B | O | W | L | T | M | B | S | K | V | C | A |
| O | N | H | P | U | L | A | M | P | U | O | S | X | U | C |
| T | Y | F | I | J | T | X | R | O | F | P | L | C | V | J |
| P | R | J | D | L | J | I | H | A | Y | B | C | F | W | R |
| E | I | Q | L | X | L | E | F | A | T | H | E | R | E | V |
| C | F | M | E | N | S | N | M | U | V | Z | W | O | B | A |
| X | I | L | R | M | D | R | J | L | I | S | T | A | N | D |

| | | | | |
|---|---|---|---|---|
| LAMP | LIGHT | BOWL | GOOD | DEEDS |
| WORLD | CITY | MEN | HIDDEN | SHINE |
| PRAISE | HOUSE | FATHER | HILL | STAND |

Copyright © Sermons 4 Kids, Inc. • All Rights Reserved • www.sermons4kids.com


**செயல்நடவடிக்கை எண்:2 படத்திற்கு வர்ணம் தீட்டவும்**





படத்திற்கு வர்ணம் தீட்டிய பின் அதை வெட்டி, நீங்கள் தினமும் பார்க்கக்கூடிய இடத்தில் ஒட்டி வைக்கவும். இதைப் பார்க்கும்போது நீங்கள் ஒளியாகவும். பிறருக்கு ஒளிகொடுக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நினைவுகூரமுடியும்.

## கிறிஸ்துவர்கள் ஒளியாய் இருக்கிறார்கள் - மத்தேயு 5:14-16

நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது. எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை; மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளிதரும். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்.






சூரியன் ஒளியைத் தருகிறது. சூரியனின் ஒளியைத் தான் நிலவு பெற்று அதைப் பிரதிபலிக்கிறது. நிலவுக்கு சொந்தமாக எந்தஒளியும் இல்லை. சூரியனைத் தவிர நிலவுக்கு வேறு எந்த ஒளியும் இல்லாதது போல இயேசுவைத் தவிர நமக்கு ஒளி இல்லை. கிறிஸ்தவர்கள் இயேசுவின் ஒளியைப் பெற்று உலகிற்கு ஒளியாக இருக்கிறார்கள்.

நம்மிடம் இயேசுவின் ஒளிமட்டுமே உள்ளது. நமக்கென்று சொந்தமாக ஒளி இல்லை என்பதால், நமக்கும் இயேசுவுக்கும் இடையில் எந்தத் தடையும் வராமல் இருக்க நாம் கவனமாக இருக்க வேண்டும். நமக்குள் ஒளிவீசும் இயேசுவின் ஒளியை யாரும் தடுப்பதை நாம் விரும்பவில்லை. இயேசுவைப் பிரதிபலிக்கும் வரை நாம் உலகின் ஒளியாக இருக்கிறோம். மேலும் இந்த உலகின் ஆன்மீக இருளை ஊடுருவிச் செல்ல ஒளி வழங்கப்படுகிறது.

அன்புத் தந்தாய்

இயேசுவின் வழியாக நீர் தந்த ஒளிக்காக நன்றி கூறுகிறோம். இயேசுவின் ஒளியை இந்த உலகிற்குப் பிரதிபலிக்க எங்களுக்கு உதவியருளும். இயேசுவுக்கும் எனக்கும் இடையே எந்தத் தடையும் வராமல் எங்களைப் பாதுகாத்தருளும். என்னில் ஊடுருவியிருக்கும் இயேசுவின் ஒளியை எதுவும் தடுக்காதிருப்பதாக. ஆன்மீக இருளை ஊடுருவிச்செல்லும் இயேசுவை நாம் பிறருக்கு பிரதிபலிக்கச் செய்தருளும். இவையாவும் இயேசுவின் பெயரால் மன்றாடுகிறோம். ஆமென்.

### என்னுடைய மறுமொழி

நான் பிறருக்கு ஒளியாகத் திகழ்வேன்.

________________________________________

________________________________________

## தவக்காலப் பிரச்சாரம் 2024

தவக்காலத்தில் நீங்கள் ஒளிரக்கூடிய வழிகளில் ஒன்று தவக்காலப் பிரச்சாரத்தில் நீங்கள் ஈடுபாடு காட்டுவது. மாமறை மாவட்ட மனித வள மேம்பாட்டு அலுவலகம் இதை ஏற்பாடு செய்கிறது. தவக்காலப் பிரச்சாரத்தின் வழியாக, ஏழைகள், உதவி தேவைப்படுவோருக்கு இயேசுவின் அன்பையும் இரக்கத்தையும் கொண்டு சேர்க்கும் வழியாக திருஅவை காட்ட விரும்புகிறது.

### பண வங்கிப் பெட்டி

தவக்காலப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக AOHD பல நடவடிக்கைகளை ஏற்பாடு செய்கிறது. இந்த ஆண்டு குழந்தைகளுக்கு ஒரு சிறப்புத் திட்டமாக பண வங்கிப் பெட்டியை அறிமுகப்படுத்துகிறது. இந்தத் திட்டத்தின் நோக்கம், தவக்காலத்தில் தர்மகாரியங்களைச் செய்வதின்வழி, இயேசுவின் ஒளியைப் பிறருக்குக் கொண்டு செல்லவேண்டும் என்று உணர்ந்துகொள்ளவும், அதைச் செயல்படுத்தவும் மேலும் இது தவக்காலத்தில் மட்டுமல்ல, ஆண்டின் எந்த நேரத்திலும் இதை செயல்படுத்தலாம்.




பண வங்கிப் பெட்டி கீழ்க்கண்டப் படத்தில் காட்டப்பட்டிருக்கும் ரொட்டியைபோல இருக்கும். இதைப் பார்க்கும்போது, உணவு, உடை, மருந்துப்பொருட்கள் இன்னும் பல முக்கியமான பொருட்கள் தேவைப்படுபவர்கள் நம்மைச் சுற்றியிருக்கிறார்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. தவக்காலத்தில் நம்முடைய இனம், சமயம், கலாச்சாரம் எதுவாக இருந்தாலும், நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு அவரின் அன்பைக் கொண்டு செல்லும் கடவுளின் உண்மையான மகனாக , மகளாக மாற இயேசு நம்மைத் தம்மிடம் அழைக்கிறார்.

### இந்த பணப்பெட்டியை எப்படி பெற்றுக்கொள்வது?

உங்களின் பங்கில் உங்கள் மறைக்கல்வி ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்லுங்கள். அதை எவ்வாறு பயன்படுத்துவது என்று மறைக்கல்வி ஆசிரியர் உங்களுக்கு விளக்கமளிப்பார். அதன்பின் உங்கள் பெற்றோர்/பாதுகாவல் மற்றும் நண்பர்களோடு சேர்ந்து இதைச் செய்து முடியுங்கள்

### இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே, இத்தவக்காலத்தில் எங்கள் பாவங்களுக்காக மனம் திரும்பவும், உம்மை நெருங்கிவரவும் எங்களை அழைக்கின்றீர். ஈஸ்டர்பெருவிழாவை அர்த்தமுள்ளதாக கொண்டாடுவதற்கு என்னை நன்கு தயார்படுத்திக் கொள்ள எனக்கு உதவும்.
என் குடும்பம்,நண்பர்கள் மற்றும் ஏழைகள் அனைவருக்கும் இயேசுவின் ஒளியைக் காட்டும் அருளைத் தாரும்.
தூய ஆவியானவரே, இந்த தவக்காலத்தில் எனக்கு உதவும்.
இவை யாவும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.